புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419


# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 237 | 03-03-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 237 | 03-03-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை, தூதரக முயற்சி மூலம் தீர்வு: பிரதமர் மோடி வலியுறுத்தல்



புதுடெல்லி: மார்ச்.3–

மத்திய கிழக்கில் மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், உலகளாவிய மோதல்களுக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்படுவதையே இந்தியா ஆதரித்து வந்துள்ளதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். மத்திய கிழக்கின் தற்போதைய நிலை கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

டெல்லியில், கனடா பிரதமர் மார்க் கார்னி உடன் இணைந்து பத்திரிகையாளர்களைச் சந்தித்த பிரதமர் மோடி, மத்திய கிழக்கில் தற்போது அதிகரித்து வரும் மோதல் குறித்த கேள்விக்கு பதில் அளித்தார். அப்போது அவர், ''இத்தகைய பிரச்சினைகளுக்கு, பேச்சுவார்த்தை மற்றும் தூதரக முயற்சிகள் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இந்தியா எப்போதும் வலியுறுத்தியுள்ளது. மோதல்களை அமைதியான முறையில் தீர்க்கும் நிலைப்பாட்டை இந்தியா நீண்ட காலமாக பின்பற்றி வருகிறது.

பயங்கரவாதம், தீவிரவாதம், தீவிர சிந்தனைகள் ஆகியவை நமக்கு மட்டுமல்லாது, உலகம் முழுவதற்கும் பெரிய சவால்களாக உள்ளன. இத்தகைய அச்சுறுத்தல்களை சமாளித்து உலக அமைதியையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்ய நாடுகளுக்கு இடையில் நெருக்கமான ஒத்துழைப்பு அவசியம்.

உலகம் முழுவதும் உருவாகும் பதற்றங்கள் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு எப்போதும் தெளிவாக இருந்துள்ளது. இந்தியா தொடர்ந்து அமைதி மற்றும் நிலைத்தன்மையை வலியுறுத்தி வருகிறது. இரண்டு ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்படும்போது, அமைதிக்கான குரல் மேலும் வலிமை பெறும்'' என தெரிவித்தார்.

மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பு குறித்த கேள்விக்கு பதில் அளித்த பிரதமர் மோடி, "பிராந்தியத்தில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அரசு நிலைமையை நெருக்கமாக கண்காணித்து வருகிறது. அங்குள்ள நாடுகளுடன் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருக்கிறது." என தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து நடத்திய வான் தாக்குதலில், ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும், அந்நாட்டின் 40 முக்கிய அரசியல் தலைவர்கள் கொல்லப்பட்டனர். தொடர்ந்து அரசியல் தலைமைகள், ராணுவத் தளபதிகள், ஆயுத கிடங்குகள் ஆகியவற்றை குறிவைத்து இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா தாக்குதல்களை நடத்தி வருகின்றன. பதிலுக்கு, இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகளை குறிவைத்தும் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானுக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா இஸ்ரேலை தாக்கியதைத் தொடர்ந்து, லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது.

## ரூ.249 கோடி செலவில் கட்டப்பட்ட சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம்: முதலமைச்சர் திறந்து வைத்தார்






சென்னை:மார்ச்.3–

உலகம் டிஜிட்டல் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் நிதிநுட்ப துறை சார்ந்த வேலை வாய்ப்புகளை உருவாக்கி, நிதிநுட்ப துறையில் சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாட்டினை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 17.6.2023 அன்று சென்னை மாவட்டம் ஆலந்தூர் வட்டம் நந்தம்பாக்கத்தில் 56 ஏக்கர் நிலப்பரப்பில், நிதிநுட்ப நகரம் அமைப்பதற்கும், அதில் முதற்கட்டமாக 5.56 லட்சம் சதுர அடி கட்டட பரப்பளவில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் என்ற அடுக்குமாடி கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டினார். இந்த நிதிநுட்ப கோபுரக் கட்டடம் ரூ.249 கோடி செலவில் 2 அடித்தளங்கள், தரை மற்றும் 11 தளங்களுடன் 5.56 லட்சம் சதுர அடி பரப்பளவில், அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்டு உள்ளது. இதனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். நிதி மற்றும் நிதிநுட்ப நிறுவனங்கள் தங்கள் செயல்பாடுகளை தொடங்குவதற்கு தேவையான அனைத்து வசதிகளுடன் தயார் நிலையில் உள்ள உயர்தர அலுவலக இடங்கள் நிதிநுட்ப கோபுரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. லீடு பிளாட்டினம் கிரீன் பில்டிங் தரத்துடன் உருவாக்கப்பட்ட இக்கட்டடம், வாகன நிறுத்த வசதிகள், 250 மற்றும் 50 இருக்கை வசதிகளைக் கொண்ட கூட்ட அரங்கங்கள், உணவகங்கள், உடற்பயிற்சிக் கூடம், குழந்தைகள் பராமரிப்பு மையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. தடையற்ற வணிக சூழலை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உலகத் தரத்திலான உள் கட்டமைப்புடன் உருவாக்கப்பட்ட இக்கட்டடம், தமிழ்நாட்டின் நிதிநுட்ப வளர்ச்சிக்கான முக்கிய மையமாக திகழும். இந்நிகழ்ச்சியின்போது பிரைம் போரெக்ஸ், சிம்ப்ட்ரா டெக்னாலஜிஸ், மிட்பின் வெல்த் பிரைவேட் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு நிதிநுட்ப கோபுரத்தில் அலுவலக இடங்கள் ஒதுக்கீட்டிற்கான ஆணைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். விழாவில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், டி.ஆர்.பி. ராஜா, எம்.எல்.ஏ.க்கள் கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், டிட்கோ தலைவர் சந்தியா வேணுகோபால் சர்மா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் அருண் ராய், டிட்கோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, டிட்கோ நிர்வாக இயக்குநர் சுவேதா சுமன், தொழில் மற்றும் நிதி துறையைச் சார்ந்த நிறுவனங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.",

## சின்னம்மை நோய் தடுப்பு தொடர்பாக விரிவான வழிகாட்டுதல் நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது பொது சுகாதாரத் துறை!!

சென்னை : மார்ச்.3–

சின்னம்மை நோய் தடுப்பு தொடர்பாக விரிவான வழிகாட்டுதல் நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது பொது சுகாதாரத் துறை.

சின்னம்மை நோய் என்பது வெரிசெல்லா ஜோஸ்டர் வைரஸ் காரணமாக எளிதில் பரவும் தொற்று நோய் என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. லேசான காய்ச்சல், சோர்வு, தளர்ச்சி, பசியின்மையுடன் சின்னம்மை தொற்று தொடங்குகிறது என்று பொது சுகாதாரத்துறை குறிப்பிட்டுள்ளது.

## வளைகுடா நாடுகளில் போர் பதற்றம்: தமிழர்களுக்காக அவசர உதவி எண்கள் அறிவிப்பு

சென்னை: மார்ச்.3–

வளைகுடா நாடுகளில் நிலவி வரும் போர் பதற்ற சூழலை கருத்தில்கொண்டு, அங்குள்ள தமிழர்களின் அவசர உதவிக்காக உதவி எண்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போர் காரணமாக, ஈரான் மற்றும் அதைச் சுற்றியுள்ள ஐக்கிய அரபு அமீரகம், குவைத், பஹ்ரைன், ஓமன், சவுதி அரேபியா, கத்தார் உள்ளிட்ட வளைகுடாநாடுகளில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது.

அங்குள்ள இந்தியர்களின் பாதுகாப்பு கருதி, தேவையற்ற பயணங்களைத் தவிர்க்கவும், இந்திய தூதரகம் வழங்கும் அறிவுறுத்தல்களை முறையாக பின்பற்றி வீடுகளிலேயே பாதுகாப்பாக இருக்குமாறும் இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழக முதல்வர் என்ற முறையில், வளைகுடா நாடுகளில் வசித்து வரும் நம் தமிழர்களின் பாதுகாப்பு குறித்து மிகுந்த கவலை அடைந்துள்ளேன். அவர்களின் நிலைமையை உடனுக்குடன் கண்காணித்து, அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்க அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறைக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது.

இதற்காக டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பிரத்யேகக் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, நிலைமை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள தமிழர்கள் அல்லது தமிழகத்தில் உள்ள அவர்களது குடும்பத்தினர் ஏதேனும் அவசர உதவி தேவைப்பட்டால், தமிழக அரசின் 24 மணி நேர கட்டணமில்லா உதவி எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

அதன்படி, இந்தியாவுக்குள் இருப்பவர்கள் 1800 309 3793 என்ற எண்ணையும், வெளிநாடுகளில் இருப்பவர்கள் +91 80 6900 9900 மற்றும் +91 80 6900 9901 ஆகிய எண்களையும் தொடர்பு கொள்ளலாம். மேலும், டெல்லி கட்டுப்பாட்டு அறையை 01124193300 மற்றும் 92895 16712 (வாட்ஸ் அப்) ஆகிய எண்கள் மூலம் தொடர்பு கொள்ள வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு திமுக எம்எல்ஏ கிடைப்பாரா... ஆளும் கட்சியாக இருந்தும் பலன் இல்லை தொண்டர்கள் எதிர்பார்ப்பு...

ஈரோடு. மார்ச்.03

ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் கடந்த பல ஆண்டுகளாக திமுக சார்பில் எம்எல்ஏ இல்லாதது அந்த தொகுதி திமுகவினருக்கு பெரும் ஏமாற்றத்தை தந்துள்ளதாக தொண்டர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் ஈரோடு மேற்கு, ஈரோடு கிழக்கு, மொடக்குறிச்சி, பெருந்துறை, பவானி, கோபிசெட்டி பாளையம், பவானிசாகர் என மொத்தம் 8 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன.

இதில் தற்போது நிலவரப்படி ஈரோடு மேற்கு மற்றும் ஈரோடு கிழக்கு தொகுதிகளைத் தவிர மீதமுள்ள ஆறு தொகுதிகளிலும் அதிமுக, பாஜக எம்எல்ஏக்கலை உள்ளனர்.

இதில் கோபிசெட்டி பாளையம் அதிமுக எம்எல்ஏவாக இருந்து வந்த கே ஏ செங்கோட்டையன் சமீபத்தில் தவெகவில் இணைந்து விட்டார். அவர் தனது எம்எல்ஏ பதவி சில மாதங்களுக்கு முன்பு ராஜினாமா செய்து விட்டார்.

இந்த நிலையில் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் தற்போது பாஜகவை சேர்ந்த டாக்டர் சி. சரஸ்வதி எம்எல்ஏவாக இருந்து வருகிறார். 2021 சட்டமன்ற பொது தேர்தலில், திமுக வேட்பாளர் சுப்புலட்சுமி ஜெகதீசனை சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி பெற்றார்.

இந்த நிலையில் நட்சத்திர அந்தஸ்து பெற்ற மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதியில் கடந்த 20 ஆண்டு காலமாக திமுகவை சேர்ந்த ஒருவர் எம்எல்ஏவாக வரவில்லை. இதனால் ஆளும் கட்சியாக இருந்தாலும் அந்த தொகுதிக்குட்பட்ட திமுகவை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் எந்த ஒரு பயனும் இல்லாமல் விரக்தியில் இருந்து வருகின்றனர்.

இந்தத் தொகுதிக்கு உட்பட்ட மாநில திமுக இளைஞரணி துணை செயலாளர் கே இ பிரகாஷ் எம் பி ஆக இருப்பது சற்று ஆறுதலான விஷயம் என்றாலும் கூட, உள்ளூரில் தங்கள் கட்சியின் எம்எல்ஏ இல்லாமல் இருப்பது திமுகவினர் மத்தியில் ஒரு சோர்வை ஏற்படுத்தி உள்ளது.



இந்த நிலையில் வரும் 2026 சட்டமன்ற பொது தேர்தலில் மொடக்குறிச்சி தொகுதிக்கு திமுக சார்பில் ஒரு நல்ல செல்வாக்கு மிக்க வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெற செய்து 20 ஆண்டுகால ஏக்கத்திற்கும், எதிர்பார்ப்பிற்கும் திமுக தலைமை ஒரு நல்ல தீர்வை ஏற்படுத்த வேண்டுமென மூடக்குறிச்சி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திமுக நிர்வாகிகளும், தொண்டர்களும் மிகுந்த நம்பிக்கையோடு, எதிர்பார்ப்போடு உள்ளனர்.

இந்த நிலையில் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளராக தற்போது பொறுப்பில் இருக்கும் சு. குணசேகரன், மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட திமுக தலைமையிடம் விருப்பமுனு தாக்கல் செய்துள்ளார். அதே நேரம் தனக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதால் கண்டிப்பாக, மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட வாய்ப்பு வழங்க வேண்டும் என திமுக தலைமை இடம் அவர் வேண்டுகோள் வைத்துள்ளார். மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளராக தற்போது இருந்து வரும் சு. குணசேகரன் 1982 ஆம் ஆண்டு முதல் திமுகவில் இருந்து வருகிறார்.

1986 முதல் 1991 வரை கிளைச் செயலாளராகவும், 1991 முதல் 96 வரை அவல்பூந்துறை பேரூர் செயலாளர் ஆகவும், 1997 முதல் இன்று வரை 27 ஆண்டுகளாக( தொடர்ந்து ஆறு முறை ) மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளராகவும் குணசேகரன் இருந்து வருகிறார்.

தொடர்ந்து 1996 முதல் தொடர்ந்து, காலம் அவல்பூந்துறை பேரூராட்சி தலைவராக மூன்று முறை தொடர்ந்து வெற்றி பெற்று 15 ஆண்டுகள் பேரூராட்சி தலைவராக சிறப்பாக இவர் பணியாற்றியுள்ளார்.

மேலும் ஈரோடு மாவட்ட கூட்டுறவு சங்கங்களில் துணைத் தலைவர், இயக்குனர் என பல பொறுப்புகளையும் வகித்துள்ளார்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், திமுக தலைவர் கருணாநிதி கைது உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மொடக்குறிச்சி தொகுதியை பொருத்தவரை இவர் திமுகவினர் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் நல்ல அறிமுகத்தோடு இருப்பதோடு அனைவரிடமும் அன்பு பாராட்டி வருவது இவரது சிறப்பிற்கு ஒரு சான்று.

இவர் 1986 முதல் நடைபெற்ற சட்டமன்ற நாடாளுமன்ற தேர்தல்களில், திமுக தலைமையிடம் போட்டியிட விருப்பமுனு தாக்கல் செய்துள்ளார். அந்த வகையில் வருகின்ற 2026 சட்டமன்ற பொது தேர்தலிலும் மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட திமுக தலைமையிடம் குணசேகரன் தனது விருப்பமானவை தாக்கல் செய்துள்ளார்.

மொடக்குறிச்சி ஒன்றிய செயலாளர் சு. குணசேகரன் மொடக்குறிச்சி தொகுதியில் போட்டியிட விருப்ப மனு கொடுத்துள்ள நிலையில், அவருக்கு திமுக தலைமை போட்டியிட வாய்ப்பு வழங்கினாள் நிச்சயமாக வெற்றி பெற வாய்ப்பு உள்ளதாக மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி திமுக தொண்டர்கள் தெரிவித்து வருகின்றனர்.

# நாட்டார் மங்கலத்தில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் கொள்கை விளக்க பொதுக்கூட்டம்



செஞ்சி.மார்ச்.03.

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி அடுத்த நாட்டார்மங்கலம் பகுதியில் தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பில் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு விழுப்புரம், கள்ளக்குறிச்சி மற்றும் திருவண்ணாமலை மண்டல செயலாளர் தா. ஆனந்த் கூட்டத்திற்கு தலைமையேற்றார்.

மயிலம் தொகுதி செயலாளர் மா. ஆனந்த் பாபு, மாவட்ட இளைஞரணி செயலாளர் அசோக், செஞ்சி ஒன்றிய செயலாளர் கோ. ராஜா, மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் ஜே. ராஜா, வல்லம் ஒன்றிய பொருளாளர் கீ. சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தங்கப்பிரகாசம் மற்றும் சத்யராஜ் வரவேற்புரை வழங்கினர். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக மாநில கொள்கை பரப்பு துணை செயலாளர் இலக்கியா கலந்து கொண்டு, கட்சியின் கொள்கைகளை விளக்கும் வகையில் சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி நகர செயலாளர் வீடியோ சரவணன், மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர் ரா. சிவா, மாநில தொழிற்சங்க அமைப்பு செயலாளர், மாநில அமைப்புக்குழு உறுப்பினர் பி.ஜி. சேகர், தமிழ்ச்செல்வன், முத்து, பிரபாகரன், வேல் முருகன், ஜெயராமன், கோவிந்தன், ரங்கநாதன், வெங்கடேசன், சேகர், பச்சையப்பன், புரட்சி முருகன், கதிர்வேல், அசரத், அண்ணாமலை, டைலர் ராஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி இறுதியில் பள்ளம் ஒன்றிய செயலாளர் சிவப்பிரகாசம் நன்றியுரை ஆற்றினார்.

## பிளஸ் 2 தேர்வெழுத சென்ற மாணவி பஸ் மோதி பலி

மதுரை: மதுரையில் பிளஸ் 2 தேர்வு எழுத தந்தையுடன் டூவீலரில் சென்ற மாணவி அரசு பஸ் மோதி பலியானார். விருதுநகர் மாவட்டம் ஆவியூர் பகுதியை சேர்ந்தவர் துர்காதேவி(19). மதுரை காமராஜர் சாலையில் உள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2 படித்து வந்தார். இன்று காலை பிளஸ்2 பொதுத்தேர்வு தொடங்கிய நிலையில், மாணவி துர்காதேவி தேர்வு எழுதுவதற்காக ஆவியூரில் இருந்து தனது தந்தையுடன் டூவீலரில் வந்து கொண்டிருந்தார். மதுரை மாவட்டம் வலையன்குளம் அருகே வந்தபோது, மாணவி திடீரென பைக்கில் இருந்து தவறி கீழே விழுந்தார்.

அப்போது பின்னால் வந்த அரசு பஸ் மாணவி மீது மோதியதில் படுகாயமடைந்தார். இதையடுத்து மாணவியை ஆம்புலன்ஸ் மூலம் மதுரை அரசு மருத்துவ மனைக்கு கொண்டு சென்றனர். ஆனால், வழியிலேயே மாணவி உயிரிழந்தார். அதைப் பார்த்து தந்தை கதறி அழுதார். இது குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து, விசாரணை நடத்தி வருகின்றனர்.




முதலமைச்சர் பிறந்தநாள் விழாவிழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில்செஞ்சியில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை ஒன்றிய சேர்மன்விஜயகுமார், பேரூராட்சி சேர்மன் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் தொடங்கி வைத்தனர். .விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 73 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சி கூட்ரோடு, தேசூர் பாட்டை ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திமுக தலைவர், முதலமைச்சர் மு .க . ஸ்டாலின் அவர்களின் 73வது பிறந்தநாள் தினத்தை முன்னிட்டு ஆயிரம் நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர். இதில் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலக்ஷ்மி செயல்மணி,பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள், ஒன்றிய நகர கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# போச்சம்பள்ளி அருகே டைல்ஸ் மார்பிள் சங்கம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா.



கிருஷ்ணகிரி, மார்ச். 3–

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மகாதேவ கொல்லஹள்ளி ஊராட்சி சமுதாயக் கூடத்தில் டைல்ஸ் மற்றும் மார்பில் சங்கம் சார்பில் நல திட்ட உதவிகள் மற்றும் புதிய நல வாரிய அட்டை வழங்கும் விழா சேலம் மண்டல துணைத் தலைவர் சபரீசன், பா.ம.க மாவட்ட செய லாளரும் வெங்கடேஸ் வரா டைல்ஸ் உரிமையாளருமான பழனிவேல் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வாழ்வுரிமை கட்சி நெப்போலியன், கார்த்திக் சீனிவாசன், அய்யப்பன், நாம் தமிழர் கட்சி கவின் குமார், செந்தமிழ் சேரன், சரத்குமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நல திட்ட உதவிகள் மற்றும் புதிய நலவாரிய அட்டைகளை சங்க உறுப்பினர்களுக்கு வழங்கினார்கள்.

நிகழ்ச்சியில் சிவம் சூப்பர் டைல்ஸ் உரிமையாளர் மாதேஷ், எஸ்.எல்.பி டைல்ஸ் நந்தகுமார், அம்மன் டைல்ஸ் உரிமையாளர் சக்தி, சங்க துணை தலைவர் மகாதேவன், செயலாளர் சீனிவாசன், ஒருங்கிணைப்பாளர்கள் சுரேஷ் பாபு, பிரபு, தமிழரசன், சக்தி, காப்பாளர் மாதேஸ்வரன் உள்ளிட்ட ஏராளமான டைல்ஸ் மற்றும் மார்பில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் ஒன்றிணைந்து நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

### கரூர் அரசு கலைக்கல்லூரியில் நிரந்தர ஆசிரியர்கள் உள்ளிருப்பு போராட்டம்

# தமிழக அரசு மாணவர்களையும் கல்லூரியின் நலனையும் காப்பதற்காக முறையாக இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்



கரூர் அரசு கலைக்கல்லூரியில் நிரந்தர ஆசிரியர்கள் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வருகிறார்கள். இங்கு சுமார் 140 ஆசிரியர்கள் பணி செய்து வருகிறார்கள். இந்த போராட்டத்தை ஆசிரியர் சங்கம் நடத்தி வருகிறது. இதில் மூத்த ஆசிரியர் ஒருவர் கூறுகையில் நான் இங்கு 20 ஆண்டுகள் பணிபுரிந்து வருகிறேன்.இக்கல்லூரியில் சிறப்பான முறையில் நிர்வாகம் நடைபெற்று வருகிறது. இக்கல்லூரியின் பொறுப்பு முதல்வர் சுதா அவர்களுக்கு 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் ஆதரவு தெரிவித்து உள்ளனர்.

இந்தக் கல்லூரியில் ஆசிரியர் ஜாதி ரீதியாக பிரிந்து செயல்படுவது வேதனையாக உள்ளது. இங்கு பல ஆண்டுகளாக நடந்து வருகிறது. கல்லூரி முதல்வர் சுதா அவர்கள் பொறுப்பேற்றவுடன் கல்லூரி நிர்வாகத்தை முறையாக சீர் செய்துள்ளார். இதனால் கல்லூரிக்கு வந்து சரியாக பணி செய்யாத ஆசிரியர்கள்

அவர் மீது கடும் கோபத்தில் உள்ளனர்.இந்தக் கல்லூரியில் ஆசிரியர் சங்கத்தை சேர்ந்த மூர்த்தி, பானுமதி, முருகம்பிகை மற்றும் பிரபாகரன் பல குற்றச்சாட்டுகளை முதல்வர் மீது சொல்லி வருகிறார்கள். இதில் கணினி அறிவியல் துறை தலைவராக பிரபாகரன் இருந்து வருகிறார். இவர் ஏற்கனவே அரியலூர் அரசு கலைக் கல்லூரியில் பாலியல் குற்றச்சாட்டு காரணமாக கரூர் அரசு கலைக் கல்லூரிக்கு மாற்றம் செய்யப்பட்டார். இவரைப் பற்றி அங்கு நீங்கள் விசாரித்தால் அனைத்து உண்மைகளும் தெரியும்.இவர் தற்போது இங்கு பல தவறான செயல்களில் ஈடுபட்டு வருகிறார். இவர் சரியாக வகுப்பிற்கு வருவதில்லை என்று இவருடன் பணிபுரியும் ஆசிரியர்கள் மாணவர்கள் கூறியுள்ளனர்.2021 ஆம் ஆண்டு முன்னாள் கல்லூரி முதல்வராக இருந்த கௌசல்யா தேவி அவர்களிடம் புவி அமைப்பியல் துறை மாணவர்கள் துறைத் தலைவர் கரிகாலன் அவர்கள் 15 லட்சம் மோசடி செய்துள்ளார் என்று புகார் கொடுத்தனர். இது சம்பந்தமாக கரிகாலன் மீது விசாரணை குழு அமைக்கப்பட்டு அவரை விசாரணைக்கு அழைத்தார்கள். ஆனால் அவர் விசாரணை குழுவில் ஆஜர் ஆகாமல் கல்லூரி நிர்வாகத்தையே மிரட்டி வந்தார். இவர் துறையைச் சார்ந்த மாணவ, மாணவிகளை பல மன உளைச்சலுக்கு ஆளாக்கியது மட்டுமல்லாமல் அவர்களையும்

கீழ்த்தரமாக திட்டுவது, அவமானப்படுத்துவது அனைத்து வேலைகளையும் செய்யச் சொல்வது போன்ற காரணங்களால், இவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.பிறகு இவர் புவி அமைப்பில் துறை மாணவர்கள் எழுத்துப்பூர்வமாக கல்லூரி முதல்வரிடம் மனு கொடுத்திருந்தனர். இதை அறிந்து கரிகாலன் வெளியில் இருந்து ஆட்களை அழைத்து வந்து கல்லூரியில் வேலை செய்யக்கூடிய பேராசிரியர்களான பானுமதி,மாறன்,ஜெயந்தி போன்றவர்களை அழைத்து வந்து முதல்வர் அறையில் முதல்வரை மிரட்டி அவரை கண்ணீர் சிந்த வைத்து பல தொந்தரவு செய்தார்கள்.

பிறகு கல்லூரி முதல்வர் அறையில் ஐந்து பேரும் சேர்ந்து கொண்டு மாணவர்கள் கொடுத்த புகாரை கல்லூரி முதல்வர் அனுமதியின்றி அவருடைய அறையில் இருந்து எடுத்து அதை முதல்வர் அறையில் இருந்த ஜெராக்ஸ் மிஷினில் நகல் எடுத்து சென்று விட்டார்கள்.மூர்த்தி அவர்கள் புவியியல் துறையில் பணியாற்றி வருகிறார். இவர் பல மாணவர்களை செய்முறை தேர்வில் தேர்ச்சி பெறாமல் செய்துள்ளார். இதுவும் ஒரு மிகப்பெரிய குற்றமாகும். இவர் மீதும் பல குற்றச்சாட்டுகள் மாணவர் மூலமாக கொடுக்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ள கல்லூரி முதல்வர் சுதா அவர்கள் பானுமதி ஆசிரியர் அவர்களுக்கு நூலகர் பொறுப்பு வழங்கியுள்ளார். இதில் அவர் பல முறைகேடு செய்துள்ளதை கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக அவர் உடனடியாக நூலகர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது கல்லூரி முதல்வர் அவர்களுக்கு மூன்று பதவியா என்று போராடும் ஆசிரியர் சங்கம். 2018ல் கல்லூரியின் பொறுப்பு முதல்வராக இருந்த பாண்டியம்மாள் அவர்கள் மூன்று பொறுப்புகள் வகித்து வந்தார்.ஒன்று தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி பொறுப்பு, முதல்வர் பொறுப்பு, துறை தலைவர் பொறுப்பு மூன்றையும் சேர்த்து வகித்தார். அப்பொழுது கல்லூரி ஆசிரியர் சங்கம் எங்கே சென்றது. ஏன் நீங்க எல்லாம் கேள்வி கேட்கவில்லை.ஜாகிர் உசேன் என்ற பேராசிரியர் மீது பாலியல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இவை உண்மையாக இருக்கும் பட்சத்தில் அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாங்களும் புகார் கொடுத்துள்ளோம்.குற்றச்சாட்டுக்கு ஆளான மாணவியை முறையாக நீங்கள் விசாரணை செய்து அதில் உண்மை இருக்கும் பட்சத்தில் அவர் மீது நடவடிக்கை எடுங்கள். ஜாகிர் உசேன் கல்லூரி வளாகத்தில் மாணவ, மாணவிகளை திட்டுவது அவர்களை மிரட்டுவது அவர்களை தீய சொல் கொண்டு பேசுவது இவையெல்லாம் உண்மைதான்.இங்கு சில ஆசிரியர்கள் கல்லூரி வருகை பதிவேட்டில் கையெழுத்துப் போட்டுவிட்டு வீட்டுக்கு சென்று விடுவார்கள். இது வழக்கமாக நடைபெற்று வருகிறது. இதை தட்டி கேட்ட முதல்வர் சுதா அவர்கள் மீது ஆசிரியர் சங்கம் பொய் குற்றச்சாட்டுக்களை கால் புணர்ச்சி காரணமாக கூறி வருகிறார்கள். வரலாற்றுத் துறை பேராசிரியர் மாறன் அவர்கள் தகுதி இல்லாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார். இவர் அரசாங்கத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். இவரை ஏன் ஆசிரியர் சங்கம் கேட்கவில்லை.இவர் ஒரே காலகட்டத்தில் அரசு பணியில் இரண்டு பதவிகளை வகித்துள்ளார். இவையெல்லாம் செய்தி தாளியில் படித்து தெரிந்து கொண்டோம்.

இங்கு பல மாணவர்கள் சில ஆசிரியர்களால் பல துன்பங்களுக்கு ஆளகப்பட்டு மிரட்டப்பட்டு வருகிறார்கள். கல்லூரியில் வணிகவியல் துறை பேராசிரியர் சண்முகம் அவர்களின் தவறான செயல்பாடு காரணமாக சில மாணவிகள் தங்களுடைய படிப்பை விட்டு வெளியேறிய உள்ளார்கள். அவரும் பல மாணவிகளை கடும் சொல் கொண்டு திட்டுவது ஆபாசமாக பேசுவது அசிங்கமாக பேசுவது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளார். இவர் மீதும் குற்றச்சாட்டுகள் முதல்வரிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் வருகை பதிவேட்டை நிர்வாக அலுவலகத்தில் வைத்ததில் எந்த தவறும் இல்லை அதுதான் அரசின் கொள்கை முடிவாக உள்ளது.கல்லூரியில் தவறு செய்யும் ஆசிரியர்களுக்கும் ஊீமீஷீ கொடுப்பது என்பது புதிதல்ல. அப்புறம் எப்படி நிர்வாகத்தை நடத்த முடியும். இவரை குறை கூறிக்கொண்டே இருப்பவர்கள் செய்த தவறை அரசு உடனடியாக கண்டுபிடித்து அவர்கள் மீது தவறு நிரூபிக்கப்படும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். கணிதத்துறை பேராசிரியர் முருகம்பிகை அவர்கள் மீது ஏற்கனவே பணம் மோசடி புகாரில் சிக்கியுள்ளார். அரசு வேலை வாங்கித் தருவதாக குற்றம் சுமத்தப்பட்டவர். இவர் மீதும் கல்லூரியில் ஏற்கனவே விசாரணை நடைபெற்றுள்ளது.

கரூர் அரசு கலைக் கல்லூரியை ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு பல ஆசிரியர்களை மிரட்டுவது மாணவர்களை மிரட்டுவது போன்ற செயல்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இதை அரசு உடனடியாக களைய வேண்டும்.குறிப்பாக கல்லூரியில் கௌரவ விரிவுரையாளர்கள் நிரந்தர பேராசிரியர்களின் வகுப்புகளை எடுத்து வருகிறார்கள். அவர்களையும் இக்கல்லூரியில் பலதுறை தலைவர்கள் அடிமையாக நடத்துவதும் வேதனையாக உள்ளது.போராட்டம் நடத்தக்கூடிய ஆசிரியர்கள் ஒவ்வொரு மீதும் பல குற்றச்சாட்டுகள் இருக்கும் பொழுது. இவர்கள் தாங்கள் உத்தமர் என்பதை காட்டிக் கொள்ளும் வகையில் கல்லூரி முதல்வர் மீது குறை கூறுவது மிக வேதனையான செயல். எனவே தமிழக அரசு மாணவர்களையும் கல்லூரியின் நலனையும் காப்பதற்காக முறையாக இந்த விஷயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

# கோவையில் மாவட்டம் முழுவதும் ஒரே நாளில் அதிரடி சோதனை "CASO" ஆபரேஷன் மூலம் 26 பேர் கைது!



கோவை: மார்ச்03

கோவை மாவட்ட காவல்துறையினர் சார்பில், மாவட்டத்தை முழுமையாக போதைப் பொருள் இல்லா மாவட்டமாக உருவாக்கும் நோக்கில் Operation CASO (Cordon and Search Operation) என்ற பெயரில் மாவட்டம் முழுவதும் விரிவான அதிரடி சோதனை மேற்கொள்ளப் பட்டது.

இச்சோதனை நடவடிக்கை, கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர்.கார்த்திகேயன், IPS தலைமையில் ஒருங்கிணைக் கப்பட்டது. அவரின் நேரடி கண்காணிப்பில்

மொத்தம் 300 போலீசார் களமிறக் கப்பட்டனர்.பேரூர் காவல் துணை கண்காணிப் பாளர் மற்றும் கருமத்தம்பட்டி காவல் துணை கண்காணிப் பாளர் தலைமையில் இந்த நடவடிக்கை சிறப்பாக செயல்படுத்தப்பட்டது.

முன்னதாக சிறீமீணீஸீ கோவை போன்ற சிறப்பு நடவடிக்கைகள் மூலம் கல்லூரி மாணவர்கள், வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்ட நபர்கள் மற்றும் பழங் குற்றவாளிகள் மீது கண் காணிப்பு மேற்கொள்ளப் பட்டு வந்த நிலையில், அதனைத் தொடர்ந்து இந்த ஆபரேஷன் CASO தீவிரப்படுத்தப் பட்டது.

கோவை மாவட்டத்தில் உள்ள கல்லூரி மாணவர்கள் தங்கி இருக்கும் தனியார் விடுதிகள் மற்றும் வாடகை வீடுகள் மீது கவனம் செலுத்தி, கே.ஜி.சாவடி, செட்டிபாளையம், மதுக்கரை காவல் நிலைய எல்லை களுக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 120 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது.

சோதனையின் போது மேற்கொள்ளப்பட்ட விசாரணை யின் அடிப் படையில், மொத்தம் 24 பேர் கைது செய்யப் பட்டனர்.இதில் 5 கல்லூரி மாணவர்கள் அடங் குவர்.கைது செய்யப்பட்ட வர்களில் சிலருக்கு முன்பு வழக்குகள் நிலுவையில் இருந்தது விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பொருட்கள்:மெத்தாம் பெட்டமின் (Metham phetamine) – 10.35 கிராம்,கஞ்சா – 4 கிலோ, கஞ்சா சாக்லேட்–2 கிலோ ,கஞ்சா ஆயில்–50 மில்லி, இருசக்கர வாகனங்கள் – 22 (முறையான ஆவணங்கள் இன்றி) ஆயுதங்கள் – 1 கத்தி, 1 அரிவாள், குறிப்பாக,சிந்தெட்டிக் டிரக் வகையைச் சேர்ந்த மெத்தாம் பெட்டமின் (Metha mphetamine) கைப்பற்றப் பட்டிருப்பது மிக முக்கிய மானதாகும். இப்பொருள் இளைஞர்களின் உடல் மற்றும் மனநலத்திற்கு கடுமையான பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஆபத்தான போதைப் பொருளாகும்.

கைது செய்யப் பட்டவர் களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் தொடர்பாக உரிய பிரிவுகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது. என்று தெரிவித்தார்.

## சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே நடந்த மஞ்சுவிரட்டு போட்டியின்போது காளைகள் முட்டியதில் 3 பேர் உயிரிழப்பு!!

சிவகங்கை : சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே நடந்த மஞ்சுவிரட்டு போட்டியின்போது காளைகள் முட்டியதில் 3 பேர் உயிரிழந்தனர். அரளிப்பாறையில் பாலதண்டாயுதபாணி கோயில் விழாவை ஒட்டி நடந்த மஞ்சுவிரட்டில் 500 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. அவிழ்த்து விடப்பட்ட காளைகள் முட்டியதில் வடமாநிலத்தவர் உள்பட 3 பார்வையாளர்கள் உயிரிழந்தனர்.

# சேலத்தில் மூத்த குடிமக்கள்,மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியரின் முக்கிய அறிவிப்பு.

சேலம். மார்ச்.3–

தமிழ்நாட்டில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேஷன் பொருட்கள் விநியோகம் மற்றும் கார்டில் திருத்தம் செய்வது குறித்து மாவட்ட ஆட்சியர் முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.




தமிழக முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ், ரேஷன் கடைக்கு வர இயலாத முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சேலம் மாவட்டத்தில் மட்டும் 1,766 நியாய விலைக் கடைகள் மூலம் 1.11 லட்சம் பயனாளிகள் இத்திட்டத்தால் பயன்பெற்று வருகின்றனர்.

மார்ச் மாத விநியோகத் தேதிகள்: வருகிற மார்ச் 2 மற்றும் மார்ச் 3 ஆகிய தேதிகளில், தகுதியுள்ள பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று ரேஷன் பொருட்கள் விநியோகம் செய்யப்பட உள்ளது. இந்த இரண்டு நாட்களில் பயனாளிகள் தங்கள் இல்லங்களிலேயே இருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளுமாறு சேலம் மாவட்ட ஆட்சியர் பிருந்தாதேவி ஐஏஎஸ் கேட்டுக்கொண்டுள்ளார். சென்னை உள்ளிட்ட பிற மாவட்டங்களிலும் மார்ச் 2, 3 மற்றும் 4 ஆகிய தேதிகளில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் ரேஷன் பொருட்கள் பயனாளிகளின் வீடுகளுக்கே சென்று விநியோகம் செய்யப்பட உள்ளது.

ரேஷன் கார்டில் திருத்தம் செய்வது எப்படி? தாயுமானவர் திட்டப் பயனாளிகள் தங்கள் ரேஷன் கார்டில் (Ration Card) ஏதேனும் மாற்றங்கள் செய்வது குறித்தும் முக்கிய அறிவுறுத்தலை சேலம் மாவட்ட ஆட்சியர் கொடுத்துள்ளார். அதன்படி, ரேஷன் கார்டில் இதுவரை தொலைபேசி எண் அல்லது மாற்றுத்திறனாளி குறித்த விவரங்களைப் பதிவு செய்யாதவர்கள் உடனே பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முகவரி மாற்றம் ஏதும் இருப்பின் அதைச் சரிசெய்து கொள்ள சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலரைத் தொடர்பு கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுதவிர வேறு ஏதேனும் சிக்கல்கள் இருந்தாலும் குடிமைப் பொருள் வட்டாட்சியர் அல்லது வட்ட வழங்கல் அலுவலரை (TSO) அணுகித் தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளலாம் என சேலம் மாவட்ட ஆட்சியர் கூறியுள்ளார்.

தாயுமானவர் திட்டம் அறிவுறுத்தல்: மேலும், ரேஷன் பொருட்கள் விநியோகத்தின் போது ஏதேனும் குறைகள் இருந்தால் அல்லது பொருட்கள் வீடு தேடி வரவில்லை என்றால், உடனடியாக வட்ட வழங்கல் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளுமாறும் சேலம் மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியுள்ளார்.

தாயுமானவர் திட்டத்தில் புதிதாக சேர முடியுமா?: தாயுமானவர் திட்டத்தில் 65 வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருந்தால் சேர்ந்து கொள்ள முடியும். 65 வயதுக்கும் மேற்பட்டவர்களாக இருப்பின் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் அலுவலகத்துக்கு சென்று, இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள விண்ணப்பிக்க வேண்டும். தகுதியானவர்களாக இருப்பின் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். மாற்றுத் திறனாளிகளும் இதே நடைமுறையை பின்பற்ற வேண்டும். இதுதவிர இன்னொரு வாய்ப்பும் இருக்கிறது.

மாதந்தோறும் பொது விநியோக திட்ட குறைத்தீர்ப்பு முகாம்கள் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நடக்கும். இதில் கலந்து கொண்டும் தாயுமானவர் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொள்ள மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் மனு கொடுக்கலாம். தேவைப்படுபவர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவும்.

# மாநிலக் கழக அமைப்பாளர் சிவா அவர்களை சந்தித்தார் ஓம்சக்தி சேகர்!

கழக தலைவர் அவர்கள் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சமீபத்தில் தன்னை இணைத்துக் கொண்ட முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஓம்சக்தி சேகர் நேற்று புதுச்சேரி திமுக அலுவலகத்துக்கு மரியாதை நிமித்தமாக வருகைத்தந்து புதுச்சேரி மாநிலக் கழக அமைப்பாளர் இரா. சிவா அவர்களை தனது ஆதரவாளர்களுடன் சந்தித்து சால்வை அணிவித்தும், பூங்கொத்து கொடுத்து வாழ்த்து பெற்றார்.







அதேவேளை, மாநில கழகம் சார்பில் மாநில அமைப்பாளர் சிவா அவர்களுலும் கழக அவைத் தலைவர் சிவகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில் குமார், சம்பத், மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், தங்கவேல், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர்கள் நடராஜன், சக்திவேல், தியாகராஜன், மற்றும் மாநில நிர்வாகிகள் இணைந்து ஓம்சக்தி சேகர் அவர்களுக்கு சால்வை அணிவித்து மனமகிழ்ச்சியுடன் வரவேற்பு அளித்தனர்.



வரவிருக்கும் தேர்தலை முன்னிட்டு டி.சி.சி. திரையிடல் குழு நேர்காணல், கிழக்கு மாவட்ட தலைவர் திரு. வேல்முருகன் அவர்களின் தலைமையில் அவர்களுடன் கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெற்றது. ராஜ்பவன் தொகுதியைச் சேர்ந்த பலர் இந்த நேர்காணலில் கலந்து கொண்டனர். முன்னாள் கவுன்சிலர் திரு. குமரன், முன்னாள் கவுன்சிலர் திருமதி. ராஜலக்ஷ்மி மற்றும் வழக்கறிஞர் திரு. நிவாஷ் அவர்கள் நேர்காணலில் பங்கேற்று, தேர்தலில் போட்டியிடும் தங்களது விருப்பத்தை தலைவர் வேல்முருகன் அவர்களிடம் தெரிவித்தனர்

# புதுச்சேரியில் அபூர்வ ‘குதிரை வேள்வி’: சித்தர்கள் முன்னிலையில் நடைபெற்ற பிரம்மாண்ட அஸ்வமேத யாகம்!

புதுச்சேரி, மார்ச்.3–

புதுச்சேரி உலக நன்மை மற்றும் அமைதியை வலியுறுத்தி, புதுச்சேரி முருங்கப்பாக்கம் மந்தக்கரை மைதானத்தில் நேற்று (01.03.2026) நடைபெற்ற “சித்தர் மாநாடு மற்றும் அஸ்வமேத யாகம்“ மிகுந்த பக்திப் பெருக்குடன் அரங்கேறியது. இந்த நிகழ்வின் சிகர நிகழ்ச்சியாக நடைபெற்ற அபூர்வமான ‘குதிரை வேள்வி’ பக்தர்களைப் பெருமளவில் கவர்ந்தது.



உலக அமைதி வேண்டி வளர்க்கப்பட்ட இந்த மகா யாகத்தில், பல வகையான அரிய வகை மூலிகைகள் அக்னியில் சமர்ப்பிக்கப்பட்டு சிறப்பு வழிபாடுகள் செய்யப்பட்டன.

இந்த நிகழ்வின் மிக முக்கிய அங்கமாக, குதிரை வேள்வி நடத்தப்பட்டது. இதற்காக அழைத்து வரப்பட்ட குதிரையானது, வேத மந்திரங்கள் முழங்க யாக குண்டத்தை ஒன்பது முறை (9) சுற்றி வந்து வலம் வந்தது.

குதிரை வலம் வந்த பிறகு, வடிவமைக்கப்பட்ட மரத்தினால் ஆன குதிரை யாக குண்டத்தினுள் அர்ப்பணிக்கப் பட்டு, வேள்வி மிகச் சிறப்பாக நிறைவேற்றப் பட்டது.

நேற்று மதியம் 2:00 மணி அளவில் தொடங்கிய இந்த மாநாட்டில், தமிழகம் மற்றும் புதுச்சேரியின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த 10க்கும் மேற்பட்ட சித்தர்கள் மற்றும் ஆன்மீகப்பெரியோர்கள் பங்கேற்று அருளாசி வழங்கினர்.

ஸ்ரீ திரௌபதியம்மன் கோவில் திடல் அருகிலுள்ள மந்தக்கரை மைதானத்தில் நடைபெற்ற இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில், ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு யாகத்தின் புகையையும், சித்தர்களின் தரிசனத்தையும் பெற்றுச் சென்றனர்.

## தூத்துக்குடி: தீப்பெட்டி குடோனில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதலமைச்சர் அறிவிப்பு

தூத்துக்குடி: மார்ச்.3–

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், பாண்டவர்மங்கலம் கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான தீப்பெட்டி குடோனில் நேற்று (02.03.2026) காலை சுமார் 8.30 மணியளவில் எதிர்பாராதவிதமாக நிகழ்ந்த தீ விபத்தில் கோவில்பட்டி வட்டம், கொடுக்கம்பாறை கிராமம், விஜயாபுரி பகுதியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 27) த/பெ.சமுத்திரம் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் பலத்த காயமடைந்து தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் விருதுநகர் மாவட்டம், சிவகாசி, பேரநாயக்கன்பட்டியைச் சேர்ந்த சுடலைமுத்து (வயது 42) மற்றும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த கோவில்பட்டி வட்டம், கிழவிபட்டி கிராமம், துரைசாமிபுரம் பகுதியில் வசித்துவரும் கணேசன் (வயது 47) ஆகிய இருவருக்கும் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் சிந்தாமணி அரசு மேல்நிலைப்பள்ளியில் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு மையத்தில் மாற்றுத்திறனாளி மாணவர் பொது தேர்வு எழுதுவதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷேக் அப்துல் ரஹ்மான், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அறிவழகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் பெருமாள் உடபட பலர் உள்ளனர்.

## மணல் கடத்திய லாரி பறிமுதல் மூன்று பேர் கைது, துணைக் கண்காணிப்பாளர் அதிரடி.




மணப்பாறை ஏப்ரல் 3

திருச்சி மாவட்டம் மணப்பாறை வையம்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அவ்வப்போது மண்ணள்ளும் கும்பல் தங்கள் கைவரிசையை இரவு மற்றும் பகல் நேரங்களில் மணல் கடத்தி வந்த நிலையில் மணப்பாறை துணை கோட்ட கண்காணிப்பாளர் காவியா அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மணப்பாறை அருகே உள்ள சமுத்திரம், மறவனூர் பகுதியில் மண் கடத்துவதாக போலீசார் சோதனையில் ஈடுபட்ட பொழுது வரகுபட்டி ராமராசு வயது 33 வெள்ளனூர் அகில் ராஜ் வயது 53 வடிவேலு வயது 24 என தெரிய வந்தது மூன்று நபர்களிடமிருந்து லாரி பறிமுதல் செய்யப்பட்டு மணப்பாறை போலீசார் வழக்கு பதிவு செய்து மணப்பாறை நீதிமன்றத்தில் ஆஜார்படுத்தி மூவரையும் திருச்சி மத்திய சிறையில் அடைத்தனர், இதனால் வையம்பட்டி மற்றும் மணப்பாறை அதனை சுற்றியுள்ள பகுதிகளில் மண் மற்றும் மணல் அள்ளும் கும்பல் ஓட்டம் எடுத்தனர்.

# T. புதுக்குப்பத்தில் KG ஃபிரண்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் நடத்திய விளையாட்டுப் போட்டிகள்: 40 அணிகள் பங்கேற்பு!

புதுச்சேரி, மார்ச். 3–

புதுச்சேரி திருகனூர் அருகிலுள்ள T. புதுக்குப்பத்தில், KG ஃபிரண்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் கிளப் சார்பில் பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த சுமார் 40 அணிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டன.



போட்டிகளின் இறுதியில் வெற்றி பெற்ற அணிகளுக்குப் பரிசுகள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டன. விழாவிற்கு வருகை தந்த சிறப்பு விருந்தினர்களுக்குப் பொன்னாடை அணிவிக்கப்பட்டு, நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டன.

போட்டியின் முடிவில் தரவரிசை அடிப்படையில் வெற்றி பெற்ற அணிகள்:

முதல் பரிசு: KG ஃபிரண்ட்ஸ் , 2ம் பரிசு: மண்ணாடிப்பட்டு, 3ம் பரிசு: மதுரப்பாக்கம், 4ம் பரிசு: கூனிச்சம்பட்டு, 5ம் பரிசு: ராதாபுரம், 6ம் பரிசு: புதுக்குப்பம், இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடு களையும் ரிநி ஃபிரண்ட்ஸ் – பிரதர்ஸ் மற்றும் விழாக் குழுவினர் (T. புதுக்குப்பம்) மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

# வளரும் விஞ்ஞானி விருது பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு..!



வந்தவாசி, மார்ச் 03:

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பரிதிபுரம் மேற்கு நகராட்சி நடுநிலைப் பள்ளி மாணவர்கள் வளரும் விஞ்ஞானி விருது பெற்றமைக்கு பாராட்டு தெரிவிக்கப் பட்டது.

காஞ்சி டிஜிட்டல் டீம் சார்பாக அறிவியல் தினத்தன்று வாலாஜாபாத் அருகில் தனியார் கல்லூரியில் நடத்திய மாணவ விஞ்ஞானிகளுக்கான தேடல் நிகழ்வில் வெற்றி பெற்று வளரும் விஞ்ஞானி விருது பெற்று பங்கேற்பு சான்றிதழ் பெற்ற செய்யாறு பரிதிபுரம் மேற்கு நகராட்சி நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கிய சான்றிதழ், கேடயம், மெடல் பரிசுப் பொருள்களை பள்ளியில் நடைபெற்ற விழாவில் செய்யாறு ரெட் கிராஸ் சங்க செயலாளர் சண்முகம், ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், பள்ளி தலைமையாசிரியை இரா.தேன்மொழி உள்ளிட்ட ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

## உத்தர பிரதேசத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான பாராவாலி ஒலிம்பிக் வாலிபால் போட்டி.. தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்று திறனாளி வீராங்கனைகள் கலந்து கொண்டு சிறப்பு..







ஈரோடு. மார்ச். 03

உத்திர பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற மாற்றுத்தி றனாளிகளுக்கான பாராவாலி ஒலிம்பிக் வாலிபால் போட்டியில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி வீராங்கனைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு பாராவளி அசோசியேசன் மற்றும் ஈரோடு பாராவளி அசோசியேசன் இணைந்து, மாற்று திறனாளி ஆண் பெண் வீரர்களை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் மாற்றுத்தி றனாளிகளுக்கான பாராபலி பால் போட்டிகளை நடத்தி அதன் மூலம் தேர்வு செய்யப்பட்ட வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உத்தரப் பிரதேசத்தில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்க செய்யும் வகையில் பயிற்சி மற்றும் போட்டித் தேர்வு கடந்த மாதம் ஈரோடு ஈங்கூர் இந்துஸ்தான் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் தேர்வு செய்யப்பட்ட 14 மாற்றுத்திறனாளி வீராங்கனைகள் உத்தர பிரதேச மாநிலத்தில் நடைபெறும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் வகையில் அவர்கள் சென்னையிலிருந்து விமானம் மூலம் டெல்லி அளித்து செல்லப்பட்டு அங்கிருந்து உத்தர பிரதேசத்திற்கு அளித்து சென்று போட்டிகளில் பங்கேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

உத்திர பிரதேசம் மாநிலம் வீரத் மாவட்டத்தில் நடைபெற்ற தேசிய அளவிலான 14வது மாற்றுத் திறனாளி பெண்களுக்கான சீனியர் போட்டி நடைபெற்றது.

இந்த போட்டியில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளி வீராங்கனைகள் மிகச் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்றனர்.

இந்த போட்டிக்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு பாராவளி அசோசியேசன் மற்றும் ஈரோடு மாவட்ட பாராவளி அசோசியேசன் சார்பாக, தயா அறக்கட்டளை நிறுவனத் தலைவர் மற்றும் ராஜாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் சிறப்பான முறையில் ஏற்பாடுகளை செய்து மாற்றுத்திறனாளி வீராங்கனைகள் போட்டியில் பங்கேற்கும் வகையில் அழைத்து சென்று வந்துள்ளார்.

மற்றும் இவருடன் இணைந்து ஈரோடு மாவட்ட சட்டக் கல்லூரி துணைத் தலைவர் டி. கார்த்திகேயன் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டம்...

### 258 மனுக்கள் வரப்பட்ட நிலையில் மேல் நடவடிக்கைக்கு உத்தரவு..



ஈரோடு மார்ச்.03

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 258 மக்கள் வரப்பெற்றது. இந்த மனுக்கள் மீது மேல் நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தர விட்டார்.

தமிழ்நாடு முழுவதும் வாரம் தோறும் திங்கட்கிழமை காலை அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பொதுமக்களுக்கான மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கத்தில் நேற்று நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திற்கு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமை வகித்து பொதுமக்களிட மிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார்.

இந்த மனுக்களில் இலவச வீட்டு மனை பட்டா, இலவச வீட்டு மனை, முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித் தொகை, கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை, அரசு வேலை வாய்ப்பு, கல்விக்கடன், மற்றும் தங்கள் பகுதியில் உள்ள பல்வேறு குறைபாடுகள் குறித்தும் பொதுமக்கள் மனுக்கள் கொடுத்தனர்.

மேலும் காவல்துறை சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள், தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு மனுக்கள் ஆகியவையும் ஆய்வு செய்யப்பட்டது.

258 மனுக்கள் வந்திருந்த நிலையில் மனுக்கள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆட்சியர் கந்தசாமி உத்தர விட்டார்.

மேலும் இந்த மக்கள் குறை தீர்ப்பு நாள் கோட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர்சக. சாந்தகுமார் மற்றும் தொடர்புடைய அனைத்து துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# சேலம் சிட்டிங் சீனியர் ராஜேந்திரனுக்கு எதிராக உ.பி.கள் - மாம்பழ நகர் பாலிடிக்ஸ்.



சேலம்: மார்ச்.3–

மாம்பழ மாவட்டமான சேலத்தில் தற்போது தேர்தல் சீசன் களை கட்டி உள்ளது. அதிமுகவின் கோட்டையாக இருக்கும் சேலத்தில் வெற்றி பெற்றதால் அமைச்சராகி இருக்கிறார் ராஜேந்திரன்.

தற்போது சுற்றுலாத்துறை அமைச்சராக இருக்கும் அவர் வரும் வெற்றியை தொடரும் முனைப்பில் இருக்கிறார். இந்த நிலையில் கடந்த காலங்களில் வீரபாண்டி ஆறுமுகத்துக்கு எதிராக அரசியல் செய்ய திமுகவின் முக்கிய புள்ளிகளை வளைத்துபோட்ட ராஜேந்திரன், தற்போது அவர்களை ஓரம் கட்டி விட்டதாக குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. இதை அடுத்து அமைச்சர் ராஜேந்திரனுக்கு எதிராக ஒன்று சேர்ந்திருக்கும் உடன்பிறப்புகள் தலைமைக்கு புகார் பட்டியலை அனுப்ப தயாராகி வருகிறார்களாம்.

சேலம் மாவட்டத்தில் கடந்த 2011 , 2016,2021 என மூன்று சட்டமன்ற தேர்தலிலும் அதிமுக சேலம் மாவட்டத்தை தனது கோட்டையாகவே வைத்துள்ளது. இந்த நிலையில் சேலம் வடக்கு தொகுதியில் மட்டுமே கடந்த 2016 மற்றும் 2021 சட்டமன்றத் தேர்தலில் தற்போது சுற்றுலாத்துறை அமைச்சராக இருக்கும் ராஜேந்திரன் வெற்றி பெற்று வருகிறார்.

பனமரத்துப்பட்டி சட்டமன்ற தொகுதியில் இருந்து சேலம் வடக்கு சட்டமன்ற தொகுதிக்கு ராஜேந்திரன் மாறியதற்கு முக்கிய காரணம் 'சேலத்து சிங்கம்' என கலைஞர் கருணாநிதியால் அழைக்கப்பட்ட வீரபாண்டி ஆறுமுகத்து எதிராக அரசியல் செய்வதற்காக அப்போதைய இளைஞர் அணி தலைவர் ஸ்டாலினால் உருவாக்கப்பட்டவர் தான் ராஜேந்திரன் என்ற பேச்சும் உண்டு.

ஆனால் ராஜேந்திரனால் வீரபாண்டி ஆறுமுகத்தை எதிர்த்து களம் ஆட முடியாத சூழ்நிலையில் ராஜேந்திரனுக்காக பக்கபலமாக இருந்தவர்கள் தான். கன்னங்குறிச்சி குபேந்திரன், சர்க்கரை சரவணன், செவ்வாய்பேட்டை ஜெயக்குமார், பழைய முதல், குமரவேல், தற்போது அதிமுகவில் இருக்கக்கூடிய மோகன், நடேசன், பத்தாவது வார்டு செயலாளராக இருந்த மோகன், மோகன் என அனைவரும் ராஜேந்திரன் அரசியல் ஈடுபட்டபோது பக்கபலமாக இருந்தவர்கள். ஆனால் தற்போது அவர்களை ஓரம் கட்டுவதற்கு காரணங்களை தேடி வருகிறார் தற்போதைய அமைச்சர் பனைமரத்தப்பட்டி ராஜேந்திரன் என்கின்றனர் சேலம் உடன்பிறப்புகள்.

இந்த நிலையில் வருகிற 2026 சட்டமன்ற தேர்தலில் ராஜேந்திரனின் வெற்றி தொடருமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. சேலம் வடக்கு தொகுதியை பொறுத்தவரை வன்னியர் மற்றும் ஆதிதிராவிடர்கள் பெரும்பான்மையாகவும், அடுத்தபடியாக இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், அரசு ஊழியர்களின் வாக்குகள் உள்ளது. இந்த நிலையில் ராஜேந்திரன் வெற்றி பெற்ற இரண்டு தேர்தலிலும் வெற்றிக்கு மிக முக்கியமாக காரணமாக இருந்தது சேலம் கன்னங்குறிச்சி பேரூராட்சி. குறிப்பாக அங்கு பேரூராட்சி சேர்மேனாக உள்ள குபேந்திரன் கன்னங்குறிச்சியை திமுகவின் கோட்டையாகவே மாற்றி வைத்துள்ளார்.

மேலும் ராஜேந்திரனுக்கு மிகுந்த தீவிர விசுவாசியாகவும் செயல்பட்டு வந்தார். இந்த நிலையில் ராஜேந்திரன் அமைச்சராக பொறுப்பேற்ற பிறகு வன்னியர் சமுதாயத்திலேயே அரசு, பந்தல் என இரு பிரிவாக பிரித்து தன்னுடைய சொந்த உட்பிரிவுக்கு அதிக முக்கியத்துவத்தை ராஜேந்திரன் கொடுத்து வருவதாக சொல்கின்றனர். இதனால் மனமுடைந்த கன்னங்குறிச்சி பேரூராட்சி தலைவர் குபேந்திரன் கட்சி நிர்வாகிகளிடம் புலம்பியதை ஆதாரமாக கொண்டு சென்று அமைச்சர் ராஜேந்திரனும் காட்டியதால் இதனால் உச்சபட்ச கோபத்திற்கு சென்ற ராஜேந்திரன் குபேந்திரனை கட்டம் கட்டி வைத்துவிட்டார் என்கின்றனர்.

அதற்கு காரணம் கடந்த 2021 சட்டமன்றத் தேர்தலில் ஓமலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக குபேந்திரன் அறிவிக்க இருந்த நிலையில் அந்த தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்டதால் இவருக்கு சீட்டு வாய்ப்பு மறுக்கப்பட்டது, இந்த நிலையில் தான் குபேந்திரனுக்கு 2026 சட்டமன்றத் தேர்தலில் வாய்ப்பு பெற்று சட்டமன்ற உறுப்பினராக குபேந்திரன் வெற்றி பெற்று விட்டால் நமக்கு போட்டி ஆகிவிடும். மேலும்

தன்னுடைய வளர்ச்சிக்கு ஆபத்து என கருதிய ராஜேந்திரன் அவரை முதற்கட்டமாக ஓரம் கட்டி தனக்கு அமைச்சர் பதவி கிடைப்பதற்கு காரணமாக இருந்த அமைச்சர் எ.வ வேலுவிடம் தெரிவித்து அவரை ஆறு மாதத்திற்கு கட்சியிலிருந்தும் நீக்கவும் வைத்து விட்டார் என புகார் கடிதம் வாசிக்கின்றனர்.

கட்சியிலிருந்து நீக்கியது எதற்காக என விசாரித்ததில் தேர்தலில் போட்டியிடுவதற்கு விருப்ப மனு கூட பெற்று அது தலைமைக்கு சென்று விடக்கூடாது என கச்சிதமாக காய் நகர்த்தி அந்த வேலையை முடிச்சிட்டார் என்றும் சொல்கின்றனர். அதுமட்டுமல்லாமல் கட்சியில் நன்றாக விவரம் அறிந்தவர்களையும் கட்சி தலைமையிடம் நெருங்க விடாமல் பார்த்துக் கொள்கிறார் என்கின்றனர்.

குறிப்பாக சூரமங்கலம் மண்டலம் திமுகவின் சீனியரும் மாநகராட்சி 26 வது வார்டு கவுன்சிலருமான கலையமுதன், மற்றொரு திமுக 18 வது வார்டு கவுன்சிலரான சர்க்கரை சரவணன், 3 வது வார்டு கவுன்சிலர் குமரவேல் ,கொண்டலாம்பட்டி மண்டலம் செவ்வாப்பேட்டை சேர்ந்த மாநகராட்சி 28 வது வார்டு கவுன்சிலர் ஜெயக்குமார், மற்றும் அம்மாபேட்டை மண்டலம் 43 வது வார்டு கவுன்சிலர் வழக்கறிஞர் குணசேகரன், அஸ்தம்பட்டி மண்டலம் 16 வது வார்டு கவுன்சிலர் வசந்தா மயில்வேல் என அரசியலில் நல்ல விவரம் தெரிந்த அனைவரையும் ஓரம் கட்டி வைத்து விட்டார்.

அமைச்சரின் இந்தப் பட்டியலில் மாநகராட்சி மேயர் ராமச்சந்திரனையும் சேர்த்துள்ளாராம் அதுக்கு காரணம் விசாரித்ததில் அமைச்சருக்கு எதிராக பார்க்கப்படும் திமுகவின் சீனியர் கலைஅமுதனிடம் மேயர் நெருக்கம் காட்டியது தானாம். அது மட்டுமல்லாமல் மற்றொரு கவுன்சிலருமான அம்மாபேட்டை மண்டலத்திற்கு உட்பட்ட 9 வது வார்டு கவுன்சிலர் தெய்வலிங்கம் இந்தப் பட்டியலில் சேர்ந்து இருக்கிறாராம். சேலம் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட சேலம் மேற்கு, சேலம் தெற்கு, சேலம் வடக்கு, என மூன்று சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள சீனியர்களும் மற்றும் தற்போது பதவியில் உள்ள மாநகராட்சி கவுன்சிலர்களும் அமைச்சர் மீது கடும் அதிருப்தியில் இருந்து வருகின்றனர் என்கின்றனர் நம்மிடம்பேசிய உடன்பிறப்புகள்.

தன்னுடைய வளர்ச்சிக்கு பாதிப்பாக இருப்பவர்களை ஓரம் கட்டிட்டா கட்சியிலிருந்து விலகிப் போய்விடுவார்கள் என்று கணக்கு போட்டு காய் நகர்த்திய அமைச்சருக்கு பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அமைச்சரால் ஓரங்கட்டப்பட்ட கன்னங்குறிச்சி பேரூராட்சி தலைவர் குபேந்திரன், மாநகராட்சி கவுன்சிலர்கள் கலையமுதன், சர்க்கரை சரவணன், ஜெயக்குமார், குமரவேல், வசந்தா மயில்வேல், என அனைவரும் அதிமுக கட்சிக்கு போக போறாங்கன்னு தனக்கு விசுவாசிகள் மூலம் செய்தி பரப்பி விட்டிருக்கிறார்கள்.

ஆனால் அதையெல்லாம் கண்டு கொள்ளாத அவர்கள் தங்களைப் போலவே அமைச்சரால் ஓரம் கட்டப்பட்டு இருக்கிற அனைவரும் ஒன்று ஒன்று சேர்த்து செயல்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. திமுகவின் மூத்த நிர்வாகியும் சேலம் நகராட்சியின் கடைசி நகர மன்ற தலைவரும், சேலம் மாநகராட்சியின் முதல் மேயருமான சூடாமணியின் பிறந்தநாளை கேக் வெட்டி மரியாதை செலுத்தி அமைச்சரின் காதில் புகையை வர வைத்துள்ளார்களாம். அடுத்தபடியா அமைச்சர் ராஜேந்திரனின் அதீத தலையிட்டால் கட்சி வேலை செய்ய முடியாமல் ஒதுங்கியிருந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பார்த்திபனை சந்தித்து அனைவரும் சேர்ந்து கட்சிப் பணிகளில் ஈடுபடலாம் என பார்த்திபனின் பிறந்தநாள் விழாவில் சபதமும் எடுத்துள்ளனர்.

இந்த நிலையில் நேற்றைய தினம் தமிழக முதலமைச்சரும் திமுக தலைவருமான ஸ்டாலினின் பிறந்தநாளை முன்னிட்டு இரண்டு தினங்களுக்கு முன்பு சேலம் பிரசித்தி பெற்ற வெண்ணங்குடி முனியப்பன் கோவிலில் தமிழக முதலமைச்சராக மீண்டும் ஸ்டாலின் வர வேண்டுமென 20 ஆடுகள் பலியிட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்ட திமுக நிர்வாகிகளுக்கு பிரம்மாண்ட விருந்து வைக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஸ்டாலினின் பிறந்த நாளுக்காக பிரம்மாண்ட கேக்கினை மூத்த நிர்வாகிகள் மூலம் வெட்டி கொண்டாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் தான் கட்சியின் வளர்ச்சியை பற்றி சிந்திக்காமல் தன்னுடைய வளர்ச்சிக்கு தடையாக இருக்கும் கட்சியினரை அமைச்சர் ராஜேந்திரன் ஓரம் கட்டினாலும் திமுக வெற்றி பெற வேண்டுமென ஓரம் கட்டப்பட்ட நிர்வாகிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து திமுக தலைமை சந்தித்து முறையிட உள்ளார்களாம். சந்திப்புக்கான தேதி இவர்கள் கேட்கப்பட்டிருப்பதை அறிந்த அமைச்சர் ராஜேந்திரன் அதற்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என யோசித்து வருகிறாராம்.

## அடையாளம் தெரியாத ஆண் சடலம் மீட்பு



கிருஷ்ணகிரி ஓசூர் ஜூஜூவாடி பகுதியில் அடையாளம் தெரியாத ஆண் சடலம் மீட்பு இந்த புகைப்படத்தில் இருக்கும் நபர் யார் என்று தெரியவில்லை? இவர் நேற்று இரவு ஜூஜவாடி செக் போஸ்ட் அருகே சாலை விபத்தில் மரணம் அடைந்து விட்டார். இவரது உடல் ஓசூர் புதிய தலைமை அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை அறையில் வைக்கப்பட்டுள்ளார்கள். இந்த நபரை அடையாளம் தெரிந்தவர்கள் யாரேனும் இருந்தால் உடனடியாக சிப்காட் காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள் 9894586173 –8667827926,

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 2 ஆயிரம் கனஅடியாக நீடிப்பு

ஒகேனக்கல்: மார்ச்.3–

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 2 ஆயிரம் கனஅடியாக வந்தது. இன்றும் அதே அளவு தண்ணீர் நீடித்து வந்தது.இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.சுற்றுலா பயணிகள் மீன் சாப்பாடு வாங்கி கொண்டு பூங்காவில் அமர்ந்து சாப்பிட்டு மகிழ்ந்தனர்.நீர்வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.",

## உளுந்தூர்பேட்டை அருகே நடுரோட்டில் தீப்பிடித்து எரிந்த சென்னை பேருந்து: 43 பயணிகள் தப்பினர்

உளுந்தூர்பேட்டை: மார்ச்.3

உளுந்தூர்பேட்டை அருகே நேற்று அதிகாலை தனியார் ஆம்னி பேருந்து நடுரோட்டில் திடீரென தீப்பிடித்து எரிந்ததால் பரபரப்பு ஏற்பட்டது. இதில் பயணித்த 43 பேர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர். நெல்லை மாவட்டம் திசையன் விளை பகுதியில் இருந்து நேற்று இரவு 43 பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு தனியார் ஆம்னி பேருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த பேருந்தை தூத்துக்குடி மாவட்டம் ஏரல் பகுதியை சேர்ந்த சரவணன் (46) என்பவர் ஓட்டி வந்தார்.

நேற்று அதிகாலை 4 மணி அளவில் உளுந்தூர் பேட்டை அருகே பாதூர் காந்திநகர் பகுதியில் ஆம்னி பேருந்து வந்து கொண்டிருந்தபோது பிரேக் சிஸ்டத்தில் திடீரென தீப்பிடித்ததை அறிந்த டிரைவர் உடனடியாக பேருந்தை நிறுத்தினார். உடனடியாக பேருந்தில் இருந்த பயணிகள் அனைவரும் அவசரம் அவசரமாக கீழே இறக்கி விடப்பட்டனர். பின்னர் அருகிலுள்ள உளுந்தூர் பேட்டை தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே பயணிகள் கீழே இறங்கிய சிறிது நேரத்தில் தீ மளமளவென பரவி பேருந்து முழுவதுமாக கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. இந்த நிலையில் அங்கு விரைந்து வந்த உளுந்தூர் பேட்டை தீயணைப்பு துறையினர் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக போராடி தீயை அணைத்தனர். இருப்பினும் தீ விபத்தில் ஆம்னி பேருந்து முற்றிலும் எரிந்துஎலும்புக்கூடுபோல் காட்சியளித்தது. இந்த சம்பவத்தால் திருச்சி சென்னை தேசிய நெடுஞ் சாலையில் அதிகாலையில் பரபரப்பு ஏற்பட்டது. இதுகுறித்து போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421